இருக்கலாம். அதை எப்படி திருத்துவது என்று வேண்டுமானால் இந்தத் துறை பரிசீலிக்கலாம். ஆனால் எல்லோரையும் நேரடியாக வேலைக்கு அமர்த்துவதில் அல்லது நேரடியாக சம்பளம் வழங்குவதில் பல்வேறு சிக்கல் இருப்பதால் இப்போது இருக்கின்ற இந்த முறையை இப்போதைக்கு நாம் கையாள வேண்டியதிருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் ஒப்பந்தம் என்ற அடிப்படையிலே நியமிக்கப்படுவதால், இடைத்தரகர்கள் பணத்தை சுரண்டிக்கொண்டு போகிறார்கள். ஆகவே, உழைக்கின்றவர்கள் நியாயமான ஊதியம் பெறும் வகையில் நேரடியாக நுகர்பொருள் வாணிப கழகமே வேலை வாய்ப்பை உருவாக்கி, ஆட்களை நியமிக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருந்தபடி நுகர்பொருள் வாணிபக் கழகமே நேரிடையாக இப்பேர்ப்பட்ட தொழிலாளர்களை நியமிப்பது என்பது இயலாத காரியம். இப்பேர்ப்பட்டவர்களுக்கு நிரந்தரமாக வேலைகள் இருப்பதும் இல்லை. இப்பேர்ப்பட்டவர்கள் நிரந்தரமாக வேலை செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதும் நியாயம் இல்லை. வேண்டுமென்றால் அவர்களே தங்களுக்குள் சங்கம் ஒன்றை வைத்துக் கொள்ளும் முறையிலே ஒப்பந்தப்புள்ளிகள் கொண்டு வந்தால், இந்தத் துறை அவர்களுக்கு முன் உரிமை கொடுப்பதற்கு ஆலோசித்து முடிவு எடுக்கலாம்.

காரைக்குறிச்சியில் பின்தங்கிய மாணவர் விடுதி.

*வினா எண். 147—திரு வ. சின்னசாமி: மாண்புமிகு உணவு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், காரைக்குறிச்சி, மேல்நிலைப் பள்ளிக்கு, பின்தங்கிய மாணவர் இல்லம் ஒன்று அமைக்க அரசிற்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு க. உறொ. எட்மண்ட்:

(அ) மற்றும் (ஆ) 1979-80ஆம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டம், நாமக்கல் தாலுக்கா விலுள்ள, காரைக்குறிச்சி புதூரில் பிற்பட்ட மாணவர்களுக்காக ஒரு மாணவர் இல்லம் திறக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

1979 நவம்பர் 8]

திரு. வ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு இதற்காக நான் நன்றி கூறிக் கொண்டு, மேலும் சேலம் மாவட்டத்தில் எங்கெங்கே பின் தங்கிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட இருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை என்றாலும், இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பிற்பட்ட மாணவர் இல்லங்களைவிட அதிகமான அளவு பிற்பட்ட மாணவர் இல்லங்களைத் அடுத்த ஆண்டு அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* வினா எண் 148—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை ஜில்லா ஓட்டப்பிடாரம் தாலுகாவிலுள்ள கட்டபொம்மன் கோட்டையை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக ஆக்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசின் நடவடிக்கை யாது?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):—

(அ) கட்டபொம்மன் கோட்டை ஏற்கனவே சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத்தான் இருந்து வருகிறது.

(ஆ) மேலும் வசதிகள் செய்யவும், மக்களுக்கு விளம்பரப் படுத்தவும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ரா. கு. பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கட்டபொம்மன் கோட்டையைச் சுற்றி சுமார் 200 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையில் ஏதாவது தொழிற்சாலையை ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன்: (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் இல்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் கோட்டை பயணிகள் அதிகமாகத் தங்கும் சுற்றுலாத் தலம் என்று அமைச்சரின் செயலரே சொல்லியிருக்கிறார்கள். அங்கே பக்கத்தில் உள்ள கயத்தாறு விமான தளம்